Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணு 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது

Bureau de la Direction:—
RUE D'AMBALATADOU AYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி
நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஞ ஆவணி-மீ -உக உ (13—9—34) } No. 42.

திருமந்திரம்

ஓமத்து ளங்கியி னுள்ளுள னெம்மிறை
யீமத்து ளங்கி யிரதங்கோள் வானுளன்
வேமத்து ளங்கி விளைவு விளைக்கடற்
கோமத்து ளங்கி குரைகட லுனே.

இருந்த பிராணனு முள்ளே யெழுமாம்
பரிந்தவித் தண்டே னண்டம் பரிய
விரிந்தவப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே.

மண்டலத் துள்ளே மனவோட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிற்
பண்டகத் துள்ளே பகலே யொளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே.

பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழன் மாலையுஞ் சாத்திய
காயக் குழலி கலவியோ டுங்கலந்
தூசித் தலையுறத் தூங்காது போகமே.

போகத்தை யுன்னவே போகாது வாயுவு
மோகத்தை வெள்ளியு மீளும் வியாழத்திற்
கூதோத்த மென்முலை யாளுநற் கூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே.

கண்டனுங் கண்டியுங் காதல்செய் போகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானி ருருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது வங்கமே.

உடலுயிர்ச் சம்பந்தம்

(30-ம் வாரத்தொடர்ச்சி)

குறள்

அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(இ-ள்) ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு—அரிய உயிருக்கு உடம்போடு அநாதியே பொருந்திய நட்பை, அன்போடு இயைந்த வழக்கு என்ப—அன்பு வடிவாக அஃதாவது அரூப சத்தி வடிவாகப் பொருந்திச் சிவத்தோடு அங்கமாவதற்கு அமைந்த இயற்கை நெறி என்பர் பெரியார்.

சத்தாகிய உடல் எப்பொழுது உண்டோ சித்தாகிய உயிரும் அப்பொழுதே உண்டு. இவை ஒன்றனை விட்டு மற்றொன்று பிரியா. உயிர் உடலைவிட்டுப் பிரியுமாயின் பின்னும் அத்தகைய பிறிதோர் சம்பந்தத்தையே நாடும். அன்றி அது பூரணப்பட்டதென்பது அசம்பாவிதமாகும். உயிர் அமலமடைந்து சிவமாகும் போது (சிவாங்கம்) அநாதியே அதனோடு சம்பந்தமுடையதாய் அதனைப் பிரியாத மெய்யும் அருள்வடிவான சத்தி யம்சமாய்த் திகழும் என்பது சொல்லாமலே அமையும். உயிர் உடம்பைவிட்டுப் பிரிந்தபின் "நறுமலர் எழுதரு நாற்றம்போல்" "உற்ற வாக்கையின் உறுபொருள்" ஆகிய ஆசானை—ஆசானாகிய சிவத்தை அடைந்த தென்பது—முத்தியடைந்த தென்பது வெற்றுரையே யாகும். அன்பே சிவம் என்பது பின் வரும் திருவாக்காலும் நன்கு வற்புறுத்தப்பட்டது.

திருமந்திரம்

அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகிலா
ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.

என்னன் புருக்கி யிறைவனை யேத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
யன்படைத் தெம்பெரு மானை யறிகிலார்
வன்படைத் திந்த வகலிட வாழ்வினி
வன்படைத் தான்ற னகலிடந் தானே.

(ஷை. 1-ம்தந்-அன்புடைமை செ 1, 5 7)

அன்பிலனஞ் சமைந்துடலுடைய
வென்பிலானையுரித்துக் களைந்தவன்
அன்பிலானை யம்மானையள்ளூறிய
அன்பினால் நினைந்தா ரறிந்தார்களே.

(அப்பர் தேவாரம் திருக்குறுந்தொகை
செ. 3)

அன்பே சிவம். சிவமே விஷ்ணு. விஷ்ணுவே சத்தி. சத்தியே சரீரமாகிய உடம்பு. பஞ்ச மூர்த்திகள், அட்ட மூர்த்திகள், ஆறு சத்திகள் என்பனகூடி உடலுயிரான. பின்வரும் பிரமாணங்களும் இவ் வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

ஔவை குறள்

வீட்டு நெறிப்பால்—பிறப்பின் நிலைமை

மாயன் பிரம னுருத்திரன் மகேசனொ
டேயுஞ் சிவமூர்த்தி யைந்து.
மாலய னங்கி யிரவிமதி யுமையோ
டேனுந் திகழ்சத்தி யாறு
மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு.
இவை யெல்லாங் கூடி யுடம்பாய
வொன்றின்
அவை யெல்லா மானது வித்து.

திருமந்திரம்

மானிட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானிட ராக்கை வடிவு சிதம்பரம்
மானிட ராக்கை வடிவு சதாசிவம்
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே.

(7-ம்தந்—பிண்டலிங்கம் செ. 1)

சூத சங்கிதை

ஆதலாற் போக மோக்க மடைதக வெண்
[ணினோர்கள்
காதல் செயுடல்கடெய்வ மயமெனக்
[கருத்தி னோர்ந்து
நீதமையூறு செய்யா துவப்புறச் செய்ய
[வேண்டும்
மேதகவுணர்ந்து கொண்மின் மெய்த்தவம்
[பூண்டு நின்றீர்.

குறள்

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(இ-ள்) அன்பின்வழியது உயிர் நிலை—அன்பு முன்னே நிற்ப அதனைப் பற்றி அதன் பின்னே நிற்பதே உயிர் பிரிந்து விடாது ஒழிவற ஒன்றி நின்ற உடம்பாகும். அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த—அவ் அன்பு இல்லாதார்க்கு உரிய உடம்புகள் வாளா எலும்புகளை அடுக்கித் தோலினால் மூடிய உடம்புகளாம்; உயிர் நிலைத்தற்கேற்ற உடம்புகள் ஆகா என்பது.

(தொடரும்)

சுத்தசாதகம் விலை அணு 2.
திருவாசக உண்மை
விலை அணு 2.
நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

"வித்தகம்"

வருட சந்தா முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரு. 3—0—0
மலாயா, சிங்கப்பூர் } ரு. 4-0—0
சைகோன்

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

ஈழநாடும் தமிழும்

(41-ம் வாரத் தொடர்ச்சி).

இவர் வேலூருக்குப்போய் அழகர்சாமி முன்னிலையில் தாம் அவர்மீது பாடிய மடலை அரங்கேற்றி மீண்டு வரும்போது வழியில் எதிர்ந்த சில புலவரை நோக்கிப் பரிசில்பெறச் செல்லுமாறு அழகர்சாமிபால்ஆற்றுப்படுத்தியதாக ஒரு புலவராற்றுப்படைச் செய்யுளும் பாடியுள்ளார். அதனையு மிங்கே தருதும்:—

பூவின்மீதெவரு மெய்ச்சுபா வருளில்
புல்லர்மீது சொலி நெஞ்சுகால்
புண்கள்பட்டு வருபாவலீ ரெனையொர்
புரவலன் கொலென வெண்ணிலீர்
யாவின்மீது முயரோவில் சிருறு
மிலங்கை நாடர சியற்றுபேர்
இசை விளங்கழகர் சாமியண்ண லரு
ளீகை பெற்றுவரு புலவன்யான்
நாவின் மீதுலவு பாவினத் தருமை
நன்குணர்ந்த தமிழறிவினன்
நாவலர்க்குதவு வள்ளலங்கவனை
நண்ணி லின்னபரி செய்துவீர்
மாவின்மீதாசனந்த மத்திமிசை
மருவு போரசனந்த நீள்
வையமீ தரசனந்த மென்று மவன்
வாயின் முன்னரடையாளமே.

இவர் பாடுதற்குக் காலமும் இடமும் வேண்டியதின்று. ஒரு பாட்டுப்பாட வேண்டுமென்று யாரும் வேண்டினால் உடனே பாடிவிடுவார். இவர் சென்னையிலிருக்கும் போது இவருடன் அகராதி வேலையிலிருந்த வீராசாமிச் செட்டியாருடைய நரைத்த குடுமியை ஒருவர் இவர்க்குக் காட்டி இதன்மீது ஒருபாட்டுப் பாடுவீர் புலவீர் என்றனராம். உடனே அக்குடுமிமேல் வைத்து ஒரு செய்யுள் பாடிவிட்டனர். அச் செய்யுள் வருமாறு:—

நாவலர் வியக்கப் பாவலர்நாவா
னன்கலை மதிவளர்த்தோங்குப்
பாவலர் முகஞ்செம்பதும மாக்கு விக்கும்
பான்மையோன் மாயனேடுளத்து
மாவலர் வீராசாமிவேள் குஞ்சி மலரயன்
றேவி வெண்கஞ்சப்
பூவலர்ந்திருப்பவதன் மிசையிருந்த
பொற்பெனப் பொலிந்திலங்குறு மால்.

இச் செய்யுள் மிகவும் இன்பம் படைத்ததாகும்.

சுவாமிநாதர்

இவர் ஏறக்குறைய நூற்றிருபது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே செல்வப் பெருமையோடு வாழ்ந்த வேளாண் குடியிலே அருணசலம்பிள்ளை யென்பவருக்குப் புத்திரராகப் பிறந்தவர். கொழும்பிலே வாழ்ந்து சலாபத்துறையிற் குளிக்கும் முத்துக்கள் முழுவதையும் தாமே யொருங்கு விலைக்கு வாங்கி வாணிகஞ் செய்தமையினாலே பிறதேயங்களினும் தம் பெயர் சென்ற முத்துச்சாமிப்பிள்ளை என்பவர் இவருக்குத் தம்பியாராவர். இலங்கைச் சட்ட நிரூபண சபையிலே அநேக ஆண்டுகளாகப் பிரதிநிதியாக இருந்த ஏலேலசிங்கமுதலியார் இவர்புத்திரர். இவர் இளம்பிராயத்திலே மானிப்பாய் வேரகப் பிள்ளையார் கோவிலிலே கந்தபுராணம் படித்துக்கொண்டிருந்த பொழுது இராகம் தவறப் படித்தமையினாலே அர்த்தம் சொல்லிக் கொண்டிருந்தவர் இவரைப் பழிக்க அதனால் இவர் இந்தியாவிற்குப்போய் பல ஆண்டுகளாக சங்கீதம் பயின்று வந்தனரென்றும், இவர் காலத்திலே மானிப்பாயே சங்கீத வித்தையிற் சிறந்து விளங்கிய தென்றும், பெயர் படைத்த வாச்சியகாரரும் இவர் முன்னிலையில் வாச்சியங்களை இயம்புதற்கு அஞ்சுவரென்றும் முன்னோர் கூறுவர். சங்கீதம் பாடுவதிலன்றி, நாடகம் பாடுவதிலும் இவர் பெயர் படைத்து விளங்கினர். இவர் பாடிய நாடகங்கள் இராம நாடகம், தருமபுத்திர நாடகம் முதலியன. இவர் காலத்திலும் பிற்காலத்திலும் இவர் பாடிய நாடகங்களே நாடகர்களாற் படிக்கப்பட்டு வந்தன. இவர் குரல் கோகிலத்தின் குரல் போல மிக இனியது என்றும், அதனால் இவர் பாடுவதைக் கேட்கும்படி முதியோரும் சிறுவரும் விரும்பி வருவர் என்றும் சிலர் கூறுப. இவர் பாட்டின் திறமை யறிதற்காக ஒரு செய்யுள் ஈண்டுத் தருதும் :—

ஆண்டு கொண்டவனிமுதலன்றி லங்கையி
லுறையும் அரிய ராவண நிசி சரன்
அழகு செறி சீதையைச் சிறைவைக்க ராமனு
யவ தரித்திடு மாயவன்
தூண்டவனுமான் சென்றறிந்து வந்தே
சொலத் தொடு கடலை யணை கட்டியே
சுக்கிரிபனொடு சேனை சூழ்ந்திடவிலங்கையிற்
றெகுதியொடு போயடைந்து
வேண்டியமருக்குவரு தம்பியும் பிள்ளைகளும்
வெகு மூலபலமு மழிய
விறலி ராவணன்மடிய கொடியிலே சிறை
மீட்ட வீர ராகவன் மருகனே
நீண்டவன்பிலே யெனினுமாண்டு கொண்டிடு
மடிமை நீ யருளெனக் குதவுவாய்
நிகரில் தொண்டமனாற்றில் நிலவு சந்நிதி
மேவும் நிமல குருபர முருகனே.

(தொடரும்)

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
பவ-வரு ஆவணி-மீ 29உ

அறஞ்செய விரும்பு

இவ் வேத சூத்திரம் ஆதி சத்தியின் அவதாரம் எனப் போற்றப்படும் ஔவையார் அருளிய "ஆத்திசூடி" என்னும் சூத்திரக் கொத்துள் தலையாயது. நமது பாட்டியார் வாய்மையான அறஞ்செய்து உய்தியடைய வேண்டும் என்னும் ஆசையாகிய விருப்பம் மீதூரப் பெற்றவராய்க் குரு நெறியால் அதனை அறிந்து அறிந்தவாறே ஒழுகி மாற்றிப் பிறந்து தத்துவப் பெரியாராய் வதிந்து தான் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெறவேண்டும் என்னும் கருணை மிகுதியால் சீவர்கள் பக்குவத்துக்கு ஏற்பப் படித்துணர்ந்து இம்மை மறுமைப் பயனைப் பெற்று உய்யும் வண்ணம் அரிய பெரிய வேத உண்மைகளை எல்லாம் தூலப் பொருளால் உலகியலுக்கும் உண்மைப் பொருளால் பாரமார்த்திகத்துக்கும் ஏற்றவாறு அருளிச் செய்தவராவர். இச்சூத்திரங்களைத் தமிழ் வழங்கும் தேயங்களில் உள்ள சிறார் முதல் கிழார் ஈறாக யாவரும் பொன்னே போல் போற்றிப் பயனடைதல் கண்கூடு. சிறிய கண்ணாடியானது பெரிய பொருளைத் தன்னகத்து அடக்கிக் காட்டுவதுபோல இச்சிறிய சூத்திரங்கள் அரிய பெரிய வேதாகமங்களை யெல்லாம் தம்மகத்து மறைபொருளாகக் கொண்டு மிளிர்கின்றன என்பது இவற்றை ஆழ்ந்து நோக்குவார்க்கு எளிதிற் புலப்படாததாகாது. அவற்றுள் இம் முதற் சூத்திரம் நுதலியது (கருதியது) யாதோ எனின், அது தான் நித்தியத்துவத்தை அடையும் பக்குவம்பெற வேண்டும் என்பது. அறம் என்னும் சிவத்துவத்தை ஆக்க முறச்செய்தற்கு(நீ) விரும்பு என்பதே இதன் உண்மைப் பொருளாகும். உலகத்திலே சீவர்கள் பக்குவங்களுக்கு ஏற்பப் போலியாக அமைந்த அறங்கள்—அறச் செயல்கள் பலப்பலவாகும். உலகியலுக்கு ஏற்ற அறங்கள் முப்பத்திரண்டு எனவும் கூறுப. சீவர்கள் பல சென்மங்களில் போலியான அறங்களை—நெறியல்லா நெறிகளை அநுட்டித்துக் கற்பனையான அன்னவை யெல்லாம் உண்மைப் பயன் தருவனவாகா என உண்மையை உணர்ந்த பின்னேயே வாய்மையான அறத்தாறு என்னும் நித்தியத்துவ நெறியை அவாவும் பக்குவத்தை — அறஞ் செய விரும்பும் பக்குவத்தை அடைபவர்களாவர். அறத்தை—அறமாகிய சிவத்துவத்தை அடையும் நெறியும் அறம் எனப்பட்டது. அறம் என்றால் என்னை? அதுதான் நித்தியத்துவமாகிய சிவத்துவம் என்று கூறப்படும். அறல் என்றால் நீர் என்ப. அதுவே அம்பு—அப்பு—அன்பு எனப் படுவது. அன்பைக் கண்டபின் ஆவதே அறம் எனப்படுவது. ஆதலால் அன்பை ஆக்க முறுவித்தற்கு உரிய செயல்களே அறத்தாறு என விதந்து கூறத் தகுவன. அன்பும் சிவமும் ஒன்றே என்பர். "அன்பே சிவம்" என்பது வேத உண்மை. அறமே அமலநிறை. அதுவே சிவம். நிறை என்றால் அற்றது என்பர். அதுதான் சலனம் அற்றது. அசைவு அற்றது— கௌண அசைவு உடையது -- அசையாமல் அசைவது என்று கூறப்படும். நிறு + ஐ = நிறை. அதுவே அறமும் ஆம். அறு + அம் = அறம் எனினும் அமையும். அமல நிறையே "உற்ற ஆக்கையின் உறு பொருள்"; அசுத்த பௌதிகதநுவாகிய "சாணகத்துள்ளே அழுந்திய மாணிக்கம்" என்க. அன்பு வடிவினனாகிய இறைவனே அறவன் எனப்பட்டனன்.

திருமந்திரம்

அறவன் பிறப்பிலி யாருமி லாதா
னுறைவது காட்டக முண்பது பிச்சை
துறவெனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்
பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.

(ஷை 6-ம் தந். துறவு செ, 3.)

அறவனாகிய அன்பு வடிவினனாகிய சிவன் இருப்பிடம் காட்டகம் எனப்பட்டது. இதுவே சுடுகாடு-பாலை-ஐந்தாம் திணை எனப்படுவது—அன்பு. பாலையில் குடியிருப்பவன் பித்தன் என்பதும் அவனே பிக்ஷாடனன் — அன்பு வடிவினன் என்பதும் அன்பே அறம்—சிவம் என்பதும் இச்செய்யுளால் நன்று வலியுறுதல் கண்டு கொள்க. இதன் விரிவை "அன்பு" என்னும் கட்டுரையில் ("வித்தகம்', இல.37) காண்க. இறைவன் அறவாழி அந்தணன் எனப்பட்டனன்; அற வடிவினன்—தரும சொரூபி எனப் பட்டனன். தர்மம் என்றால் தாங்குவது என்பர். யாக்கையின் உறுபொருளாய்—பதியாய்—இடமாய் வியாபியமாய் நின்று நம்மைத் தாங்குபவன் அறவடிவினனாகிய இறைவனே என்க. "................திருக்கரக் கோயிலான் தன்கடன் அடியேனையும் தாங்குதல்" என்றார் நமது அப்பர். தனது தான

கிய அருட்புணையால் நம்மைத் தாங்கிக் கொடுசென்று கரை சேர்ப்பவன்—நித்தியத்துவம் அடையச் செய்பவன் அருட்கடலாகிய—அறவாழி அந்தணனுகிய இறைவனே என்க.

குறள்

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் [கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(ஷை 1-ம் அதி. கடவுள் வாழ்த்து செ-1)

என்றனர் நமது பொய்யில் புலவர். அறக் கடலும் நாத அந்தத்தில் விளங்குபவனுமாகிய இறைவனது தாளாகிய தோணியைப் பற்றிய மெய்யடியார்க் கன்றி ஏனைய உலகமாக்களுக்கு அவ் அறத்துக்கு வேருகிய மாயா காரியமாகிய பிரபஞ்ச சாகரத்தைக் கடந்து அவ் அற நிலையாகிய நித்தியத்துவம் பெறுதல் முடியாதகாரியம் என்பது இதன் பொருளாகும். அறக்கடல் என்றது வியாப்பியமாகிய பதியை. அருட்கடல் என்பதும் அது. அன்பினுலாவது அறம் என்னும் அருள்; "அருள் என்னும் அன்பீன் குழவி" என்றுராகலின். வியாப்பியமாகிய பதி அற ஆழி எனப்படவே அதினின்றும் நிறை பிரிந்து வியாபாகம் பெற்ற மாயாகாரிய பிரபஞ்சம் பிற ஆழி எனப்பட்டது; கடக்கப்படவேண்டியது அதுவே ஆதலின். அந்தணன் அந்தத்தை அணவியவன்— அந்தத்தில் விளங்குபவன்-அந்தத்தை இடமாகக் கொண்டவன் என்க. அந்தம் வேத அந்தமாகிய நாத அந்தம். வியாபகமாகிய நாதங்களின் பிறப்பிடமாய்—ஒடுங்கும் இடமாய்—வியாப்பியமாய் உள்ளது நாத அந்தம். இவ்விடத்து விற்றிருப்பவனே சோதிப் பிழம்பு வடிவினனுகிய ஆரியன் என்க. ஆரியன் அந்தணன் என்பன ஒரு பொருட் சொற்கள். அந்தணன் அம் தண்மை ஆகிய அருள் வடிவினன் எனினும் ஆம்.

திருமந்திரம்

நாத முடிவிலே நல்லா விருப்பது
நாத முடிவிலே நல்யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே.

(ஷை 3-ம் தந். தியானம் செ. 12.)

திருவாய்மொழி

மறம் சுவர்மதிளெடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு
புறம் சுவரோட்டைமாடம் புரளும்போ தறிய மாட்டீர்
அறம் சுவராகிநின்ற வரங்கனார்க் காட் செய்யாதே
புறம் சுவர் கோலஞ்செய்து புள் கவ்வக் கிடக்கின்றீரே.

(தொண்டரடிப்பொடி யாழ்வார்-திருமாலை செ. 6)

இறைவன் அறவடிவினன் என்பதும் உடலுயிர் அமல மடைந்து நித்தியத்துவம் பெறுதற்கு ஏற்ற வாய்மையான சாதகமே அறத்தாறு என்பதும் அத்தகைய அறத்தாற்றையே விரும்ப வேண்டும் என்பதும் இத்திருவாய்மொழிச் செய்யுளால் நன்று வலியுறுத்தப்பட்டது. மறம் பொருள் துன்பம் என்பன உலகியல். இவை அநித்தியம். பயனும் அன்னதே. மறம் என்பது பிரவிருத்தியாகிய லௌகிகத்துக்கு ஒத்த ஆண்மைச் செயல் எனப்படும். மறத்தால் வெறுமையே--மரணமே—சூனியமே உளதாகும். மறச் செயலையே அறச் செயலாகக் கொள்வது—மறஞ் செய விரும்புவதையே அறஞ் செய விரும்புவதாகக் கொள்வது உலகியல். ஆதலால் மறம் பொருள் துன்பம் மரணம் என்பனவற்றை அறம் பொருள் இன்பம் வீடு எனக் காண வேண்டும்— மாற்ற வேண்டும் என்க. இதுவே அறஞ் செய்தல் என்பது—அறவடிவாகிய சிவத்துவத்தை ஆக்கமுறச் செய்தல் என்பது. இவ்வாறு அறம் செயவிரும்பாது--அறத்தைச் செய்யாது மறம் செய விரும்பி மறமே புரிந்து—மறஞ் சுவர் மதிள் எடுத்து—இடம்படவிடெடுத்து—இடமாகிய அறம் அறமாகிய முதல் கெடும்படி வியாபாரஞ் செய்து—அழியுந் தன்மையுடைய அசுத்த உடலை ஆக்க முறச் செய்து மரணமடைதலே—சூனிய நிலையை—வெறுமை நிலையை அடைவதே உலகியலாதலால் "மறஞ் சுவர் மதிள் எடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு" என்று கூறப்பட்டது. மலம் சோரும் ஒன்பது வாசலையுடைய அசுத்த தநுவானது மறத்தாறுகளால் உளவாகும் நிறை பேதத்தால் பிணியலடையும்போது—உயிர் பிரியும் போது அறிவு கெட்டுப் போம் ஞானம் அழிந்துவிடும்—சேதனம் பின்ன மடைந்துவிடும். அறிவு பூரணம் பெற்ற ஞானியாய்—மெய்யடியானுய் முத்தியடைதல் என்பது அசம்பாவிதமாகும்; இது பற்றியே "புறஞ் சுவர் ஓட்டை மாடம் புரளும் போது அறியமாட்டீர்" என்று கூறப்பட்டது. ஆதலால் அறஞ் செய்தலையே விரும்பிக் குருவருளால் அறம்சுவராகிநின்றவனுகிய—அருள் வடிவினனுகிய அரங்கனுக்கு ஆட் செய்தல் என்னும் வாய்மையான அறத்தைச் செய்து நித்தியத்துவம் அடையவேண்டும். அஃதாவது அறமாகிய-முதலாகிய-இடமாகிய இச்சரீரத்தை அசுத்தம் நீக்கிச் சூக்குமத்தை விளை வேற்றுதலால் அமலமாக்கவேண்டும்- அரங்கன் வடிவமாகிய "ஊனயில்காயம்" ஆய் மாற்றவேண்டும் என்பது. இவ்வாறன்றி மறஞ் செய்தலால்—செடியார் ஆக்கையை ஆக்கமுறச் செய்தலாகிய புறஞ்சுவர் கோலம் செய்தலால் பிணி மூப்புக்களால் சரீரம் பிணியலடைந்து காக்கை முதலிய வற்றிற்கே இரையாகுமாறு மரணம் என்னும் பிறவி உளதாகும் என்பார் "அறஞ்சுவராகி நின்ற அரங்கனுக்கு ஆட் செய்யாதே புறஞ்சுவர் கோலம் செய்து புள் கவ்வக்கிடக்கின்றீரே" என்று கூறுவாராயினர். பின்வரும் அப்பர் திருவாக்கும் இவ்வுண்மையையே நன்று வலியுறுத்துகின்றது.

அப்பர் தேவாரம்

பூக்கைக்கொண்டரன் பொன்னடி போற் றிலார்
நாக்கைக் கொண்டரனு நவில்கிலார்

ஆக்கைக் கேயிரை தேடியலமந்து
காக்கைக்கேயிரையாகிச் சழிவரே.

(ஷை தனித்திருக் குறுந்தொகை. செ. 5.)

"பூக்கைக் கொண்டு" என்பது "புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" (திருமந்திரம்) என்பதன் பொருளுடையது. "ஆக்கைக்கே இரை தேடி அலமந்து" என்பது "புறஞ் சுவர் கோலம் செய்து" என்பதன் பொருளுடையது. அறஞ்சுவராகி நின்ற அரங்கனுக்கு — சத்தாகிய—நித்தியமாகிய சிவபரம் பொருளுக்கு ஆட்செய்வதே வீடாக்கும் பெற்றி என்க. அறத்தை—அறமாகிய முதலை—வீட்டை ஆக்கும் பெற்றி என்க. அசுத்த தநுவை அமல தநுவாக—அருள் வீடாக ஆக்கும் பெற்றி என்க. புறஞ்சுவர் கோலம் செய்வதே கூடாக்கும் பெற்றி என்க. கூடு என்பது என்னை? அதுதான் அரங்கனாகிய கூத்தன் புறப்பட்டுப் போனகூடு—வெறுமையான கூடு—பிணம் என்க. பொய்ப் பொருளாகிய கற்பனையையே வாய்மை என நம்பி மறச் செயலால் சரீரத்தை அணு அணுவாகக் கூடாக்கி உழல்பவர்க்கு வீட்டை ஆக்கிக் கொள்ளுதற்குரிய—கட்டுதற்குரிய மெய்ப்பொருளாகிய அறவன் வேதமுதற் பொருளாகிய—நாதாந்தப் பொருளாகிய நாராயணனே-சிவனே என்று உண்மையை அறிவுறுத்துகின்றது பின்வரும் திருவாக்கு என அறிதல் வேண்டும்.

திருவாய்மொழி

வீடாக்கும்பெற்றியறியாது மெய்வருந்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்—
[வீடாக்கும்
மெய்ப்பொருள்தான் வேதமுதற்பொருள்
[தான் விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராயணன்.

வாய்மையான அறச்செயலால் குண்டலி சேடசயனனும் (சர்ப்பாபரணன்) "உற்ற ஆக்கையின் உறு பொருள்" உம் ஆகிய சிவம் என்னும் அமல நிறையை ஆக்கமுறச் செய்து ஊனங்களாகிய பிணி மூப்புச் சாக்காடுகள் ஒழிந்து அமல தநுவைப் பெறுதலே வீடாக்கும் பெற்றி என்பது இதனால் நன்று வலியுறுத்தப்பட்டது. இந்த நாராயணனே (நார் + அணை + அயனன) அன்பு என்னும் அப்பில்—நீரில் (நார்) அயனம் கொண்டவன் — சயனம் கொண்டவன் என்க. இவனே அரங்கநாதன் —தில்லை நாதன் என்க. ஐந்தாம் திணையாகிய பாலையில் — அகண்ட வெளியில்—ஞானாகாசத்தில் — சிதம்பரத்தில்—அரங்கத்தில் — தில்லையில் நடனஞ் செய்பவன் ; அருணாத ஒலியாய் விளங்குபவன் என்க. வாய்மையான வைஷ்ணவமும் வாய்மையான சைவமும் ஒன்றே. இத்தகைய பண்டைச் சத்திய நெறியை அறிய முடியாத பிற்காலத்தவர் சிலர் உண்மைக் கொள்கைக்கு முரண்பாடாகச் சிவம் வேறு விஷ்ணு வேறு எனவும் சைவம் வேறு வைஷ்ணவம் வேறு எனவும் போலியாக மதங்களை ஏற்படுத்தி உலகமாக்கள் உண்மையை உணரமாட்டாது அபிமானத்தால் கட்சிகட்டிப் போராடி அவமாகும்படி செய்து விட்டனர். இயற்கைக்கு மாறுபட்ட இத்தகைய மத வேறுபாடு பற்றிச் சாங்கோபாங்கமாக எழுந்த நூல்களுக்கும் உரைகளுக்கும் அளவில்லை. சிவம் வேறு விஷ்ணு வேறு என்னும் போலிக் கொள்கையால் நம் இந்திய தேசம் பாழ்பட்ட தென்பது மிகையன்று. இன்னோர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துதற் பொருட்டே பின்வரும் திருவாக்கு எழுந்தது என அறிதல் வேண்டும்.

சிவவாக்கியர் பாடல்

தில்லைநா யகனவன் திருவரங் கனுமவன்
எல்லையான புவனமு மேகமுத்தியானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி
[மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து
[மாய்வரே. (56)

திருவாய்மொழி

புலையறமாகிநின்ற புத்தொடு
[சமணமெல்லாம்
கலையறக்கற்றமாந்தர் காண்பரோ
[கேட்பரோதாம்
தலையறுப்புண்டும்சாகேன் சத்தியம்
[காண்மின் ஐயா!
சிலையினாலிலங்கை செற்ற தேவனே
தேவனாவான்.

(ஷை தொண்டரடிப்பொடி யாழ்வார்—திருமாலை செ. 7.)

[பிணமாகி விழுதற்குரிய செடிசேருடலமாகிய புலாலுடலை மாற்றும் வகையை நாடாது சத்திய நெறியைப் புறம்பழித்துப் புலால் உடலை ஓம்பிச் சாதலடைதலாகிய மறத்தாற்றையே அறத்தாறு எனக் கொண்ட போலி வைஷ்ணவரும் போலிச் சைவருமே பௌத்த சமணர் என்பதும் புலாலுடலைப் பூந்துருத்தியாக்கி நித்தியத்துவம் அடைதலே சத்திய நெறியாகிய அறத்தாறு என்பதும் இச் செய்யுளால் நன்று வலியுறுத்தப்பட்டன. "சிலையினால் இலங்கை செற்ற தேவன்." என்னும் கற்பனையின் உண்மைப்பொருள் அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும்.]

இதுகாறும் கூறியவைகளால் உரிய சாதகங்களால் அறத்தை விளைவேற்றுதலை—அற வடிவினனாகிய சிவம் என்னும் செம்பொருளை விளைவேற்றுதலே அறஞ்செய்தல் என்பதும் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடைதலே அதனால் ஆம் பயன் என்பதும் நன்கு பெறப்படும். இத்தன்மை வாய்த்தற்கு ஏற்ற சாதகங்களே வாய்மையான அறத்தாறு என விதந்து கூறப்படுவன ஆம். அறமாகிய வீட்டை அழியாதவாறு கட்டிக்கொண்டால்—அழியாப் பொருள் கொண்டு கட்டிக்கொண்டால் அறம் நிலைத்தது என்று கூறப்படும். இதுதான் அமலதநு. அருள் வடிவாய் நித்தியம் பெறுவது இதுவே. இடமாகிய வீடு கட்டும்போதே பொரு

ளும் அதன்கண் அடங்கி விட்டது. இடமும் பொருளும் சத்தியும் சிவமுமாய் அமையும். அறமும் பொருளும் ஒன்றுவதால் இன்பம் உளதாகும். இம் மூன்றும் கெட்டுத் திரிந்ததே வீடு எனப்படுவது. அறமே வீடாயிற்று என்க. உடலே விமலமாய் அமலமாய் அருள்வடிவான சத்தியாகின்றது அல்லவா? அதுவே வீடு என்க. அருளேயன்றி வேறு வீடு ஏது? அறம் செய்யும் அவா மீதூரப் பெற்று அதனைக் குருவருளால் அறிந்து செய்தலால் ஆம் பயன் இதுவே என்க. இத்தகைய அறத்தைச் செய்யவேண்டும் என்று கூறிவிடாது

“அறஞ்செய விரும்பு”

என்று பாட்டி கூறியதன் காரணம் என்னை? எனின் சிறிது கூறுதும்:— சீவர்கள் வாய்மையான அறத்தாறு இன்னது என அறிய மாட்டார்கள். அறத்தாறுகள் என்று பலப்பல தருமங்களும் வழிபாடுகளும் நூல்களால் கூறப்பட்டனவே எனின், அவையெல்லாம் வாய்மையான அறத்தாறு ஒன்று உள்ளது என அதனைக் குருவருளால் அடையவேண்டும் என அறிவித்தற்குச் சாதகமாவனவே யன்றி அவை தாமே சீவர்களை நேரே முத்தி வாயிலில் சேர்ப்பிக்கமாட்டா என்பது வெள்ளிடை. சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற சாதக யோகங்கள் அவ்வப் பக்குவ சீவர்களுக்கே அவர்கள் முன்னிலையில் குருவடிவாய்ப் போதரும் எல்லா அறிவும் எல்லா முதன்மையுமுடைய எம்பெருமானால் அருளப்படுவனவாகும். ஆதலால் வாய்மையான அறத்தாற்றை அறிய வேண்டும் என்னும் ஆராமையாகிய விருப்பம் மிகப் பெற்றே அக்குருநாதனை அடைந்து அவற்றை அறிந்து ஒழுகி உண்மை நிலையை அடையவேண்டும். ஆதலாற்றான் அறஞ் செய்தல் வேண்டும் என்னாது “அறஞ்செய விரும்பு” என்று அருளினள் ஔவை என அறிதல் வேண்டும். விருப்பம் என்னும் ஆராமையே வேண்டற்பாற்று. ஆராமையாகிய பக்குவம் உண்டேல் குருவும் உண்டு. ஆதலால் அறம் செய்யவேண்டும் என்னும் அவாவே விருப்பமே அமையும் அத்தகைய பக்குவமே இன்றியமையாதது. அப்பால் அவற்றை அருளி உய்திபடையச் செய்வது பரமகருணாநிதியாகிய குருநாதன் கடனாகும்.

“கேளுங்கள் கொடுக்கப்படும்”

“தட்டுங்கள் திறக்கப்படும்”

என விவிலியவேதம் (Bible) கூறிற்று.

உண்மையை நாடி அறிந்து ஒழுகுதற்கு ஏற்ற பக்குவமுடைமையே பல கோடி சென்ம நற்றவப் பயனாகச் சீவர்மாட்டு முதற்கண் அமையப்பெற வேண்டிய அரிய பெரிய நிலைமையாதலின் அவ்வுண்மையையே தமதுவேதசூத்திரக் கொத்துள் முதற்கண்ணதாய் “அறம் செய விரும்பு” என அமைத்த அம்மையார் பேரறிவின்பெற்றியாகிய முழு ஞானப் பெருக்கு என்னென்று உரைக்கப்படும்! இவ்வாற்றால் இந்நூலின் உண்மைப் பொருளை அறிதற்கு அதிகாரமுடையார் இன்னார் என்பதும் உய்த்துணர வைத்தனராயினர் நமது பிராட்டியார் என அறிக. மேலும் விரிப்பிற் பெருகும்.

இது காறும் கூறியவைகளால் உலகியலாகிய அறத்தாறு மறத்தாறே என்பதும் அறம் என்பது நித்தியத்துவமாகிய சிவத்துவம் என்பதும், குருவருளால் அதனை அடைதற்குரிய நெறியைக்கடைப்பிடித்து ஒழுகுவதே அறஞ் செய்தல் என்பதும் உடலுயிர் அமலமடைந்து நித்தியத்துவம் அடைதலே வாய்மையான அறத்தாற்றின் பயன் என்பதும், சீவர்கள் வாய்மையான அறத்தாற்றைத் தாமாக அறிந்து கொள்ள முடியாதவர்களாதலால் அதனை அறிதற்குரிய ஆராமையாகிய விருப்பம் என்னும் பக்குவம் உளதாய வழியே குருவருளால் அதனை அறிந்து ஒழுகி உய்தியடைய முடியும் என்பதும், அது பற்றியே “அறஞ் செய விரும்பு” என ஔவை அருளினள் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

வித்தகம் பெற்ற

மதிப்புரை.

இப்பத்திரிகை வியாழக்கிழமை தோறும் வெளிவருவதாகும். தொகுதி 1–இல். 25 பகுதிகள் இது காறும் வெளிவந்துள்ளன. இவ் இருபத்தைந்து பகுதிகளையும் தத்துவ ஞானப் பொருண்மேல் உள்ள ஆர்வத்தால் நாம் ஊன்றிப் பார்த்தோம்.

மக்களுள் சமய ஞானமுடையார் சிலர், கடவுளோடு கலத்தலாகிய முத்திப்பேற்றில் அவாவுள்ளாராய், அதற்குரியனவாய முயற்சிகளுஞ் செய்கின்றனர். அஃது ஒருபுறம் இருப்ப, இவ்வுலகில் தோன்றிய பல்வேறு சமயத்தவர்களாலும் முத்திநிலையின் இலக்கணம்பலவாறாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதனால், இந்தியாவில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் துவிதம், விசிட்டாத்துவிதம், சிவாத்துவிதம்; கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்றின்ன சமயவாதிகள் முத்திஇலக்கணத்தின் பேதங்களைப் பற்றியும், அவற்றுள் உண்மையானது எது வென்பதைப்பற்றியும் தம்முள் ஒருவரோடொருவர் பெரிதும் மாறுபட்டுத் தத்தஞ் சமய சாஸ்திர வியாக்கியானங்களைக்கொண்டு விஸ்தாரமாயுங் கடுமையாயும் வழக்குகளும் எதிர்வழக்குகளுமிட்டு, தத்தஞ் சமயத்தில் பேசப்படும் முத்திஇலக்கணமே உண்மையானதென்றும், பிறவெல்லாங் குற்றமுடையன வென்றுந் துணிந்து நவலுவாராயினர்.

அங்ஙனமாயினும், இப்போது வெளிவரும் “வித்தகம்” எனும் பெயர் பூண்ட இப்பத்திரிகையின் கண் அரும் பெருஞ் சாதனங்களால் உலகத்தார் காணுமாறு தூல உடலோடு மறைந்து சிவம் எனுஞ் செம்பொருளாதலே உண்மை முத்தி யென்பதும், அதுவே மீண்டு வாராநெறி யென்பதும், அதுவே பழைய சைவ சமயக்

கொள்கையென்பதும், அவ்வாறன்றி, தூல உடல் — கட்டைமேல் வைத்துச் சுட்டு விடப்படுமாறும், அல்லது கள்ளக் குழியினுள் புதைத்து விடப்படுமாறும்—பிணமாக, உயிர் பிரிதலென்னும் மரணம் முத்தியிலையன்றென்பதும், அது பிறவிக்கேதுவென்பதுமாகிய இவ்வற்புதப் பொருள்கள் சிவஞானிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளும், திருமூல யோகிகளும் திருவாய்மலர்ந்தருளிய திருவாசக திருமந்திர நூல்களினின்றும், ஒளவை குறள் முதலான ஏனைய நூல்களினின்றும் பிரமாணங்கள் எடுத்துக் காட்டிச் சாலவும் உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும், 'மெய்' என்னும்பெயருடைய ஆக்கையானது, பிணமாகி அழிந்து "பொய்" யாகிப் போகாது, உயிரோடு ஒன்றிச் சிவத்தையே சார்ந்து, 'மெய்' எனனுந் தன் பெயர்க் காரணத்தை உண்மையால் புலப்படுத்துமாறு செய்வதே சைவ சமயத்திற்கு மாண்பாகுமென்று சொல்லுங் கொட்பாடு இவ்'வித்தக'ப் பத்திரிகையில் பரக்கக் காணப்படுகின்றது. இவ்வாறு விதந்தெடுத் துரைக்கப்படும் முத்தி நெறியானது, பிற்காலத்தில் குமாரதேவராலும், தாயுமான சுவாமிகளாலும், வடலூர் இராமலிங்க சுவாமிகளாலும் வலியுறுத்திக் காட்டப்பட்டவாற்றானும் நன்கு அறியப்படும்.

இதற்கேற்பவே, முன்னைப் பெரியார் சிலர் தம் தூல உடலம் பிணமாகி வீழ்தலின்றி அதனோடு மறைந்து சிவமாகிச் சித்தி பெற்றனரென்பது புராண நூல்கள் சிலவற்றில் குறிப்பிடப் பெறறுள்ளது. சீவர்கள் சடமேதம், கர்மபேத உடையன வென்று இப்பத்திரிகையின் கண்ணே ஆங்காங்குச் செவ்விதின் எடுத்துக் காட்டப்படுதலால், தூய உடலும வினை முடிவும் அதி தீவிர பக்குவமும் அடைந்த உயிர்கள் சில முன்னரே அவ்வித தேக முத்தி பெற்றிருக்கலாம். இனியும் பெருந்தவப் பேறுருல் அப்பெற்றியனவாகும் சில உயிர்கள் அம் முத்தியைப் பெறலாம். தேகம் சூக்குமத் தன்மை யடைந்து மறைதலாகுமென்பது இக்காலத்து விஞ்ஞான நூற பரிசோதனைகளின் ஆதாரத்தினாலும் இப்பத்திரிகையில் நன்கனம் விளக்கப்படுதல் இனறியமையாததாகும்.

அவ்வியல்பினதாம் முத்திப் பேற்றிற்குறிய உயிர்ச்சாதனங்களும் உடற்சாதனங்களுமாகிய அதிநுட்ப ரகசியப் பொருள்கள் சிலவும் இந்நாளில் அனைவரும் அறியும் வண்ணம் இப்பத்திரிகையின் பகுதிகளில் ஒரோவிடங்களில் 'தேவாரம்' 'திருவாய்மொழி' 'சூதசம்ஹிதை' 'சித்தாந்த சிகாமணி' 'ஞானவாசிட்டம்' 'சித்தர் பாடல்கள்' என்றின்ன நூல்களின் மேற்கோள்களால் விளக்கப்படுகின்றன. சீவன் முத்தி, விதேசமுத்தி, சதேசமுத்தி என்பனவற்றின் பொருள்களுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில், இடையிடையே சில கட்டுரைகளில் தெளித்துக் காட்டப்படும் உண்மைத்துறவு, ஐம்பொறி அடக்குமுறை, உண்மைச் சத்துவகுணம், உண்மைமௌநம், முதலானவைகள் உலகினர் மயக்கங்களை அறவே களைந்து, பக்குவத்திறனை மிகுதிப்படுத்தி அவரை உயரிய இன்பவாழ்வில் செலுத்தும் பான்மையனவாகும். இவ் விஷயங்களெல்லாம் சிவசமாதி நிலை தலைக்கூடிப் பரமுத்தியடைய வல்ல பக்குவர்களால் சூக்கும வகையான் ஆராய்ந்தறிதற்பாலன வெனக் கூறலாம். பொதுவாகப் பிறசமயிகள் பலரும், சிறப்பாகச் சுத்தாத்துவித சித்தாந்த சைவருள் எவரேனும் ஒரு பாலாரும் வேதாந்தியருள் எவரேனும் ஒரு பாலாரும் உடலும் உயிரும் ஒன்றி மறைந்து சிவாங்கமாதலே உண்மை முத்தியாகுமென்னும் இக் கொள்கை தமக்குப் பொருந்தாமல், இதனோடு மிக பகைத்து, இன்ன முத்திப்பேறு இடனுவதன்றென வாது செய்யலாம். ஆயினும், சமயக் கொள்கைகளின் மாறுபாடுகளில் அறிவுடையார் ஒருவரை யொருவர் வெறுத்து வசைச்சொல் வழங்கி இன்னல்படாமல் அன்பும் பொறையும் பாராட்டி, அம்மாறுபாடுகளை தணித்து ஆராய்ந்து பேன்பேனும் உண்மை கண்டு இனிது வாழ்வதே சால்புடைத்தாகும். இது நிற்க.

'வித்தகம்' என்னும் இச் சொல்லிற்கு, அறிவாற்றல், சதுரப்பாடு, திருத்தம் முதலான பொருள்கள் நிகண்டு நூல்களிலும், இலக்கிய நூல்களின் உரைகளிலுங் காணப்பட்டிருப்ப, இப்பத்திராசிரியரால் இதற்கு 'எல்லா உடலுயிர்க்கும் வித்தாயும், அவ்வுடலுயிர் ஆக்கமுறுதற்கு இடமாயும் இருப்பது' என்று பொருள் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறே 'கந்தழி' 'கற்பூரம்,' 'ஞானி,' 'துப்புரவு' 'உபநிசத்து' என்றற் றொடக்கத்துப் பல சொற்களுக்குத் தத்துவ ஞானப் பொருள்கள் செய்யப்பட்டிருத்தல் வியக்கற்பாலதுஞ் சிந்திக்கற்பாலதுமா மென்பது சொல்லாமலே அமையும். இவ்வாசிரியர் நம் செந்தமிழ் மொழியில் வித்தகம் நிரம்பிய வித்துவப் பெரியாராதலின், இவர் தம் அரிய பெரிய தத்துவ நுண்பொருட் கட்டுரைகளில் ஆங்காங்கு வியத்தகு சொற்களும் சொற்றொடர்களும் மிளிர்ந்து காணப்படுகின்றன.

ஞானம் பலபல திறத்தினதாகும்: அதனால் ஞானியரும் பலபல திறத்தினராவர். எனவே, இப்பத்திரிகை ஒரு சார் அநுபவ ஞானிகளுக்கு மிகவும் பயன்படற்பாலதாகும். ஆயினும் முத்திப் பேற்றில் இத்துணைப் பெருநோக்கமுடைய இந்த ஞானப் பத்திரிகையைச் சுத்தாத்துவித சித்தாந்த சைவரும், சிவாத்துவித சைவரும், ஐக்கியவாத சைவரும், வைணவரும் வேதாந்தியரும், ஏனைய பல் வேறு சமயத்தவரும், பெற்றுப் படித்து ஆனந்தக் களிப்புறுவாராக.

[ஞாயிறு]

குறிப்பு:—எமது "வித்தக" த்தை ஆர்வமுடன் பெற்றுத் தமது நுண்மாணுழை புலத்தால் செவ்வனம் ஆராய்ந்து செம்மை மனத்தால் உண்மையை உரைத்து அரிய பெரிய அபிப்பிராயத்தை மனமுவந்து விரிவுற வழங்கிய அறிஞரும், கல்வி கேள்விகளிற் சிறந்த வித்துவப் பெரியாருமாகிய "ஞாயிறு" ஆசிரியர் உயர் திரு உருத்திரகோடீசுரர் அவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கத்தையும் நன்றி யறிதலையும் சமர்ப்பிப்பதோடு உண்மையை நாடும் ஆற்றலும் காதலும் வாய்ந்த இப்பெரியார் உலகிற்கு உபகாரியாய் நீடுவாழும் வண்ணம் புதுவை நந்தி பொன்னடித் துணைகளைப் போற்றுகின்றேம். ஞாயிறு என்னும் அரிய பெரிய செந்தமிழ்ச் சங்கியையின் மாண்பு "வித்தகம்" இல 19 பக்கம் 3 இல் கூறப்பட்டது. ஆதலின் ஈண்டு விரித்தல் மிகை.

[ப—ர்]

Sandharam Printing Works, Pondicherry. Le Gerant, R. Nagarattinam